

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' அடிப்படையில் தி.மு.க உறுப்பினர்கள். சேர்க்கும் பணியில் தீவிரமாக பணியாற்றி மாவட்ட முதல் மாவட்டமாக வருவதற்கு தீவிரமாக பணியாற்ற மாநகர ஒன்றிய, பகுதி கழகம். கோட்ட கழக உறுப்பினர்களுக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன் கேட்டுக்கொண்டார். கூட்டத்தில். மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே. சுபாசு, மு.கார்த்திகேயன், தொகுதி பொறுப்பாளர் பி.ஏ.ஆர். இளங்கோவன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள். சி.ராஜேந்திரன், கே.டி.மணி, தாமரைக்கண்ணன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மண்மங்கலத்தில் 1346 பேருக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள்!

# கரூர் மாவட்டத்தில் ரூ.2.90 கோடியில் 10 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

கரூர், ஜூலை 29-

கரூர் மாவட்டத்தில் ரூ.2.90 கோடி மதிப்பீட்டில் 10 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், கரூர், மண்மங்கலம் வட்டத்திற்குட்பட்ட 1346 நபர்களுக்கு விலையில்லா வீட்டு மனைப் பட்டாக்களையும் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் கரூர் மாவட்டத்தில் ரூ.2.90 கோடி மதிப்பீட்டில் 10 புதிய வளர்ச்சி திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், அட்லஸ் கலையரங்கில் நடைபெற்ற விழாவில் கரூர் மண்மங்கலம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 1346 பொதுமக்களுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்களையும் வழங்கினார்.

வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பேசியதாவது

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில், பொதுமக்களுக்கு அடிப்படைத் தேவைகளுக்கு அதிகளவில் முக்கியத்துவம் அளித்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். ஆட்சிப் பொறுப்பேற்ற நாள்முதல் தொடர்ந்து திட்டங்களை அறிவித்து பணிகளை தொடங்கி வைத்து செயல்படுத்தி வருகிறார்கள்.

நிலமற்ற ஏழை எளிய மக்களுக்கு வருவாய்த் துறையின் சார்பாக மாநகராட்சி நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் பொதுமக்களுக்கு பட்டா வழங்கும் திட்டத்தினை அறிவித்து செயல்படுத்தி உள்ளார்கள். அதனடிப்படையில் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஆட்சேபனை இல்லாத புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு வருகிறது. வருவாய்த் துறை அலுவலர்களால் பயனாளிகளின் ஆவணங்களை ஆய்வு செய்யப்பட்டு தகுதியான நபர்களுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா வழங்கப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில் கடந்த ஜூலை மாதம் 1275 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டது. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கரூர் வருகையின் போது ஏறத்தாழ 10,000 நபர்களுக்கும், அதற்கு முன்னதாக 18128 நபர்களுக்கும் என மொத்தம் 45,788 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் இதுவரை வழங்கப்பட்டு வரலாற்றுச் சாதனையை முதலமைச்சர் அவர்கள் படைத்துள்ளார்கள். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் சென்று, முகாம் நடைபெறும் இடங்களுக்குச் சென்று மனுக்களை வழங்கி நீண்ட காலமாக பட்டாக்கள் இன்றி சிரமப்பட்டு வந்த நிலை இப்போது இல்லை. அந்தக்காலம் மாறி, வருவாய்த் துறையின் சார்பாக நேரடியாக சென்று விசாரணை செய்து நில அளவை செய்து, அதற்கான பட்டாக்களை தயார் செய்து வழங்கும் மகத்தான திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் வழங்கி உள்ளார்கள்.

மகளிர் உரிமைத் தொகை, நான் முதல்வன், புதுமைப்பெண் திட்டம், விடியல் பயணம், மக்களைத்தேடி மருத்துவம். 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு, கலைஞர் கனவு இல்லம், திருமாநிலையூர் புதிய பேருந்து நிலையம், சாலை பணிகள், அதனைத் தொடர்ந்து 250 ஏக்கர் பரப்பளவில் புதிய சிப்காட் அமைக்கும் பணி, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும் வகையில் ஐடி பார்க் அமைக்கும் பணிகள் ஆகிய பணிகளை விரைவில் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கவுள்ளார்கள்.

"உங்களுடன் ஸ்டாலின்" எனும் சிறப்பு வாய்ந்த திட்டத்தை தொடங்கி வைத்து இதுவரை கரூர்மாவட்டத்தில் 30 முகாம்கள் நத்தி 22,530 மனுக்கள் வரப்பெற்றுள்ளன. சில மனுக்களுக்கு அன்றைய தினமே தீர்வு காணப்படுகிறது. ஒரு சில மனுக்களுக்கு ஒருவார அளவிற்குள் விசாரித்து தகுதியுடைய மனுக்கள் மீது தீர்வு காணப்படுகிறது. அதிகபட்சமாக 45 நாட்களுக்குள் அனைத்து மனுக்களுக்கும் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற உத்தரவுகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள். எனவே இலவச வீட்டு மனைப் பட்டாக்களை பெறும் பெரியோர்கள், இளைஞர்கள் மற்றும் தாய்மார்கள் யாருடைய ஆட்சியில் நமக்கு பட்டா கிடைக்கிறது என்பதை எண்ணி பார்த்து முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேசினார்.

மண்மங்கலம் வட்டம் மண்மங்கலம், பஞ்சமாதேவி, ஆத்தூர், நெரூர் வடக்கு தெற்கு, காதப்பாறை, சோமூர், மின்னாம்பள்ளி, கோயம்பள்ளி, நன்னியூர், குப்புச்சிபாளையம், புஞ்சை கடம்பங்குறிச்சி, ஆண்டாங்கோவில் கிழக்கு, மேற்கு கருப்பம்பாளையம், தாளப்பட்டி அப்பிபாளையம், பள்ளபாளையம்

கரூர் வட்டம் கரூர் எல்.என்.எஸ். தாந்தோணி, சணப்பிரட்டி, தோரணகல் பட்டி, திருமாநிலையூர், ஆச்சிமங்கலம் ஆகிய 25 வருவாய் கிராமங்களைச் சேர்ந்த 1356 நபர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

முன்னதாக கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி வட்டம் ஈசநத்தம் பகுதியில் 1இலட்சம் லிட்டர் கொள்ளளவு ரூ.37.67 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி, ரவுண்டு டேபிள் அமைப்பு சார்பாக மேல்நிலைப் பள்ளியில் ரூ 99.51 இலட்சம் மதிப்பீட்டில் 6கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டும் பணி, ஆண்டாங்கோவில் கிழக்கு ஊராட்சி பெரிய ஆண்டாங்கோயில் அக்ரகாரம் பகுதியில் ரூ. 1.40 கோடி மதிப்பீட்டில் திறந்தவெளி கிணற்றில் மின்மோட்டார் பொருத்தி பம்பிங் லைன் அமைத்து ரெட்டிபாளையம், ஆண்டாங்கோவில் புதூர், சரஸ்வதிநகர், தில்லைநகர் ராஜா நகர், கோதைநகர், காயத்திரிநகர், பாலிடெக்னிக்பிரிவு பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பணிகள், ஆண்டாங்கோயில் குடித்தெரு அமராவதி ஆற்றில் ரூ12.50 இலட்சம் மதிப்பீட்டில் படிக்கட்டு அளமக்கப்பட்ட பணிகளை தொடங்கி வைத்தார்.

காதப்பாறை ஊராட்சி தங்கநகர் தீரன் சின்னமலை நகர் வார்டு எண் 4 பெரியார் நகர் வெங்கமேடு வாட்டு 5, திண்ணப்பா நகர் முருகன் மார்ட் அருகில் வார்டு எண் 38, தெற்கு காந்திகிராமம் ரஜினி மளிகை கடை எதிரில் வார்டு 39 ஆகிய பகுதிகளில் முழு நேர நியாய விலைக் கடைகள் திறக்கும் பணிகள் என மொத்தம் ரூ 2.90 கோடி மதிப்பீட்டிலான 10 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார்.

கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், மேயர் வெ.கவிதா, துணை மேயர் ப. சரவணன், கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், வட்டாட்சியர்கள் மோகன்ராஜ், குமரேசன், மகேந்திரன், மண்டலக் குழுத் தலைவர்கள் எஸ்.பி. கனகராஜ், சக்திவேல். ஆர்எஸ். ராஜா, மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி, வீரபாண்டி பேரூராட்சி, வார்டு எண் 4 , 5 க்குட்பட்ட காமராஜர் வீதி குறுக்கு வீதிகள், அம்மன் நகர் குறுக்கு வீதிகளில் ரூபாய் 112 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை மேம்பாடு பணி, வார்டு எண்.4, 11 க்குட்பட்ட சாந்தி நகர் குறுக்கு சாலைகள் மற்றும் நந்தவன நகர் குறுக்கு சாலைகளில் 41 லட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை மேம்பாடு பணிகளை கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, பேரூராட்சி மன்ற தலைவர் வே. பத்மாவதி ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் ஒன்றிய கழக செயலாளர் பிரதீப், கூடலூர் நகர கழக செயலாளர், நகராட்சி மன்ற தலைவர் அறிவரசு, பேரூர் கழக செயலாளர் சுரேஷ், பேரூராட்சி துணைத் தலைவர் இனியராஜ் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் மேற்கு ஒன்றிய தி.மு.க, சார்பில் மண், மொழி, மானம், காத்திட 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற முழக்கத்துடன் கழக அரசின் நான்கு ஆண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைத்து புதிய உறுப்பினர் சேர்க்கை பணியில் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ரா. வரதராஜன் ஈடுபட்டார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பூக்கடை ராஜா, மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கரூர் மாவட்ட வருவாய் துறையின் சார்பில், கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர், மண்மங்கலம் வட்டங்களைச் சார்ந்த 1346 நபர்களுக்கு, விலையில்லா வீட்டு மனைப் பட்டாக்களை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கி பேசினார். இந்நிகழ்வில் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அருகில் உள்ளனர்.

### அமைச்சர் - முனைவர் கோவி.செழியன் - சு.கல்யாணசுந்தரம் எம்.பி. பங்கேற்பு!

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## தீர்மானங்களை விளக்கி மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

தஞ்சாவூர் ஜூலை.29.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் க.நசீர்முகமது தலைமையில் சாக்கோட்டை அன்பு மஹாலில் நடைபெற்றது.

கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மு.மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்ட கழக நிர்வாகிகள் க.நசீர் முகமது, கோவி.அய்யாராசு, எஸ்.துரைமுருகன், ஜெ.நடராஜன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர்கள் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் முனைவர் செ.குறிஞ்சிவாணன் (திருவிடைமருதூர்), பி.எம். ஆனந்த் (பாபநாசம்), தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா. தெட்சிணாமூர்த்தி, மாநில சார்பு அணி நிர்வாகிகள் ஆடுதுறை மு.உத்திராபதி, இராம.விஜயன், மற்றும் ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க 'ஓரணியில் தமிழ்நாடு' எனும் மாபெரும் முன்னெடுப்பை கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்ததை தொடர்ந்து மாநிலம் முழுவதும் குடும்பம் குடும்பமாக 2 கோடிக்கு மேற்பட்ட பொதுமக்கள் சமூகநீதியை காக்கும் ஜனநாயக பேரியக்கமான திமுகவில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். கழக தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்த உறுப்பினர் சேர்க்கை இலக்கினை, தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் தொகுதிகளில் விரைந்து அதிகப்படியான உறுப்பினர்களைச் சேர்த்து நம்முடைய தஞ்சை வடக்கு மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டுக்காக "உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தினை கழகத்தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்து, தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள், திட்டங்களை அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே சென்று வழங்கும் இந்த மாபெரும் திட்டத்தின் சிறப்பு முகாம் நடைபெறும் நாட்களில் பெருமளவில் பொதுமக்களை கலந்துகொள்ள செய்து பயனடைய வைக்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழ்நாட்டில் பல பல்கலைக்கழகங்களை உருவாக்கி, தமிழ்நாடு உயர் கல்வியில் உயரமடைய செய்து, நானிலமெங்கும் தமிழ்நாட்டினர் உயர் பொறுப்புகளில் பணியாற்று அடித்தளமிட்ட நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி காலத்தால் அழியாத உலகம் போற்றும் காவியத்தலைவர் கலைஞர் அவர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் கும்ப கோணத்தில் 'கலைஞர் பல்கலைக்கழகம்' நிறுவுவதற்கான சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவை கிடைப்பில் போட்டுள்ள ஆளுநர் ரவி அவர்களுக்கு இக்கூட்டம் தனது கண்டனத்தை தெரிவித்து கொள்கிறது.

தமிழ்நாடு ரூ.1,96,309 என்ற தனிநபர் வருமான குறியீட்டின் மூலம் மாநிலங்களுக்கிடையே இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. இந்தச் சாதனையானது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற உன்னத கொள்கையோடு செயல்பட்டு வரும் திராவிட மாடல் அரசின் தொலைநோக்கு திட்டங்கள், தொழில் வளர்ச்சி, முதலீடுகளை ஈர்க்கும் முயற்சிகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்களின் கிடைத்த வெற்றியாகும். இத்தகைய வெற்றியை ஈட்டி தந்த திராவிட நாயகன் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டி மகிழ்கிறது.

"I belong to the Dravidian stock எனப் பேரறிஞர் அண்ணா முழங்கிய நாடாளுமன்ற மாநிலங்களவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாதங்களை தமிழ்நாட்டின் உரிமைக்குரலை ஓங்கி ஒலித்த, திராவிடத் தூணாக முழங்கி விடைபெற்ற மதிமுக பொதுச்செயலாளர் வைகோ அவர்கள், சண்முகம் அவர்கள், எம். எம்.அப்துல்லா ஆகியோரது பணிகளை பாராட்டியும் எம்.பி., யாகத் தொடரும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் அவர்கள், புதிய குரலாக ஒலிக்கவுள்ள கமல்ஹாசன் அவர்கள், எஸ். ஆர்.சிவலிங்கம் அவர்கள், கவிஞர் சல்மா ஆகியோரின் பணிகள் சிறக்க இக்கூட்டம் வாழ்த்துகிறது.

தஞ்சை வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளராக சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்களை நியமனம் செய்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், கழக பொதுச் செயலாளர் அவர்களுக்கும், கழக துணை பொது செயலாளர் அவர்களுக்கும், முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், கழக அமைப்புச் செயலாளர், துணை அமைப்புச் செயலாளர்கள் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர – ஒன்றிய – பகுதி பேரூர் கழகங்களில் பொது உறுப்பினர் கூட்டம் நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் பாகத்திற்கு ஒரு இளைஞர் அணி நிர்வாகி பட்டியலை, இளைஞர் அணி அமைப்பாளர்களிடம் விரைந்து ஒப்படைக்குமாறு இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கழக தீர்மானக் குழுச் செயலாளர்

# கீரை எம்.எஸ்.விஸ்வநாதன் உடல் நலக் குறைவால் மறைவு!

## தருமபுரி மாவட்டக் கழகத்தினர் அஞ்சலி!

தர்மபுரி, ஜூலை. 29-

தர்மபுரி மாவட்டம் அரூர் அருகே உள்ள கீரப்பட்டியைச் சேர்ந்தவர் கீரை எம்.எஸ். விஸ்வநாதன் வயது (75) நேற்று உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



மறைந்த கீரை எம்.எஸ். விஸ்வநாதன், பேரறிஞர் அண்ணா காலத்தில் இருந்தே தி.மு.க.வில் பணியாற்றி வந்துள்ளார்.முத்தமிழறிஞர் கலைஞருடன் நெருக்கமாக இருந்தார். 89-90 காலகட்டத்தில் அப்போதைய முதல்வர் கலைஞர் அவர்களை அழைத்து தனது தம்பியின் திருமணத்தை நடத்தினார். ஒருங்கிணைந்த தர்மபுரி-கிருஷ்ணகிரி மாவட்ட துணைச் செயலாளராக 50 ஆண்டுகளாக திறம்பட பணியாற்றினார்.1989ல் தேர்தல் பிரச்சாரத்தில் முன்னாள் பிரதமர் வி.பி. சிங்கின் பேச்சை தமிழில் மொழி பெயர்த்து சொற்பொழிவாற்றினார்.

கட்சியில் மாநில சட்டதிட்ட குழு இணைச் செயலாளர்,மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளராகவும், 1977 முதல் தலைமைக் கழகப் பேச்சாளராகவும், தற்போது மாநில தீர்மானக் குழுச் செயலாளர் ஆக பணியாற்றி வந்தார்.

தி.மு.க. தலைமை அறிவித்த அனைத்து போராட்டங்கள்,ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கடந்த சில தினங்களாக உடல் நலிவுற்று இருந்த நிலையில் 28.07.2025 அதிகாலை 2.00 மணியளவில் அரூர் கீரைப்பட்டியில் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார். இவருக்கு பிரேமா என்ற மனைவியும் நற்றமிழ், நிலவு, தென்றல் ஆகிய மூன்று மகள்களும் அன்புச்செழியன் என்ற மகனும் உள்ளனர்.

தகவல் அறிந்து மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செத்தினர்.



கோவை, பீளமேடு, அண்ணாநகரில் உள்ள மாநகர் மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் கூட்டம் தொகுதி பார்வையாளர், கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர் மகேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் மண், மொழி, மானம் காத்திட 'ஓரணியில் தமிழ்நாடு' வீடு வீடாகச் சென்று கழக உறுப்பினர் சேர்க்கையை, தீவிரப்படுத்துவது குறித்து கலந்துரையாடினார். இதில் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பொதுக்குழு உறுப்பினர் முமாசா.முருகன், பகுதி பொறுப்பாளர்கள் ப.பசுபதி, மார்க்கெட் எம்.மனோகரன், வி.ஐ.பதுருதீன், என்.ஜே.முருகேசன், இலா.தேவசீலன், டெம்போ சிவா, ஆ.கண்ணன், ஆர்.எம். சேதுராமன், கோவை மாநகராட்சி சுகாதார குழு தலைவர் பெ.மாரிச்செல்வன் உள்பட கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஆசியாவில் காகித தயாரிப்பில் ஒரு முன்னணி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறைகளில் பல புதுமைகளை பயன்படுத்தி பல்வேறு வகையான காகிதங்களை தயாரித்து வருகிறது. இந்நிலையில், டிஎன்பிஎல் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் சந்தீப் சாக்சேனா. கூடுதல் தலைமை செயலாளர், மேம்படுத்தப்பட்ட டிஎன்பிஎல் காப்பியர் காகிதத்தை 21.07.2025 (திங்கட்கிழமை) அன்று திருச்சியில் வெளியிட்டார்.